DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 194/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | முத்துக்குமார்@புலிப்பாண்டி |
| Father's Name | : | முத்துமணி |
| Village | : | ஏ.விளாக்குளம் |
| Taluk | : | மானாமதுரை |
| Calling | : | -- |
| Age | : | 25/2026 |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 25.06.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மதுரை மத்திய சிறையில் சிவகங்கை தாலுகா காவல்நிலைய குற்ற எண். 262/2022 என்ற கொலை வழக்கில் சிறைவாசியாக உள்ளேன். வழக்கின் எதிரியான ஆனந்தக்குமார் என்பவரை எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு சம்மந்தமாக எந்த விபரமும் தெரியாது. இவ்வழக்கில் காயம்பட்ட முனியசாமி, அஜய் ஆகியோர்களை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

WEB COPY

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 14.11.2020 ம் ஆண்டு பகல் 3.30 மணியளவில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணன், கர்ணன், முனியசாமி ஆகியோர்கள் மானாமதுரை தாயமங்கலம் ரோட்டில் MP மஹால் முன்பு உள்ள பஞ்சவர்ணம் பெட்டிக்கடை அருகே நின்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த ஆனந்தக்குமார் என்பவத் அஜயை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்றும் பிச்சுவா கத்தியால் அஜயை வலது பக்க நெஞ்சில் குத்தி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் பின்னர் அருகில் நின்றிருந்த முனியசாமிதடுக்க முயற்சித்ததால் அவரையும் வலது பக்க மணிக்கட்டில் குத்தி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் அருகில் இருந்த நாங்கள் சத்தம்போட்டு விரட்டி ஓடவும் எதிரி தப்பியோடினார் என்றும் பின்னர் காயம்பட்டவர்களை மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும் அஜயிடம் விசாரித்தபோது ஏற்கனவே தண்ணி அடித்தபோது பிரச்சினை இருந்தது வந்ததாக சொன்னார் என்றும் போலிசார் விசாரணையில்சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:இல்லை

**மறு விசாரணை**: இல்லை

/Sd./S.Mohana Ramya,
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY